
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1122

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

49

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



# பெரியாருக்கும் முன்னோடி 'இருகூர்'!

**கோ**வை மாவட்டத்தில் உள்ள இருகூர், திராவிட இயக்க வரலாற்றில் மிக முக்கியமான மற்றும் ஆழமான தடம் பதித்த ஓர் ஊர். குறிப்பாக, 'சுயமரியாதை இயக்கம்' மற்றும் 'நீதிக்கட்சி' காலத்திலிருந்தே பகுத்தறிவுப் பாசறையாகத் திகழ்ந்து வரும் ஊர் இருகூர். சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கக் காலத்திலேயே பெரியாரின் பகுத்தறிவு கருத்துகள் இருகூரில் வேகமாகப் பரவின. திராவிட இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க உள்ளூர் மற்றும் வட்டார அளவிலான சில மாநாடுகள் இருகூரில் நடைபெற்றுள்ளன. இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் பல்வேறு முக்கிய போராட்டங்களிலும் இருகூரைச் சேர்ந்தவர்கள் தீவிரமாகப் பங்கேற்றுள்ளனர்.

குறிப்பாக, 1944-ஆம் ஆண்டு சேலம் மாநாட்டில்தான், 'திராவிடர் கழகம்' என்ற பெயர் உருவானது. ஆனால், இருகூரில் அதற்கு முன்பே, 'திராவிட முன்னேற்றச் சங்கம்' என்ற பெயரில் ஒரு அமைப்பு செயல்பட்டு வந்தது. 1930-ஆம் ஆண்டில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

கோவைக்கிழார் சி.எம்.ராமச்சந்திர செட்டியார் இந்த அமைப்பைத் தொடங்கி வைத்துள்ளார். அடுத்த ஆண்டு, இதன் முதலாம் ஆண்டு விழாவில், பெரியார் நேரடியாகக் கலந்துகொண்டு பேசியுள்ளார். 03.01.1931 அன்று நடைபெற்ற அவ்விழாவில், பெரியார் பேசிய உரை 11.01.1931 அன்று 'குடிஅரசு' இதழில் பதிவாகியுள்ளது. இருகூரில் இருந்த ஆதி திராவிட சமூகத்தினர்களால் இந்த 'திராவிட முன்னேற்றச் சங்கம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதும், அதற்கான தேவை ஏன் வந்தது என்பதையும், பெரியாரின் உரை மூலம் புரிந்துகொள்ள முடிகிறது.

"உங்களைத் தெருவில் நடக்கவிடாததைப் பற்றியும், உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கவிடாமல் தடுத்து, கலகம் செய்ததைப் பற்றியும், உங்கள் பிள்ளைகள் படிப்பதனால், இந்த ஊர் உயர்ந்த சாதியார்கள் என்பவர்கள், தங்கள் பிள்ளைகளை நிறுத்திக் கொண்டதைப் பற்றியும், ஆதி திராவிடர் சமூகத்தை மற்ற சமூகத்தார் செய்யும் கொடுமைகளைப் பற்றியும் இங்கு பேசியவர்கள் எடுத்துச் சொன்னதை கேட்க, எனக்கு மிக மிக ஆத்திரமாய் இருக்கின்றது" எனக் கூறியுள்ள பெரியார், இப்படி அவர்கள் தாழ்த்தப்பட்டதற்கான காரணம் என்ன என்பதையும், அந்த உரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

ஆக, இருகூர் பகுதிகளில் அன்றைக்கு நிலவிய சாதிய கொடுமைகளில் இருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் மீள வேண்டும் என்ற நோக்கத்தில்தான் 'திராவிட முன்னேற்ற சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். அதுவும், நீதிக்கட்சியையும் சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்து அதற்கு'திராவிடர் கழகம்' என்று பெரியார் பெயர் சூட்டுவதற்கு முன்பாகவே இருகூரில் 'திராவிட' அடையாளத்துடன் ஒரு சங்கத்தை நிறுவியுள்ளனர். பெரியாரின் வருகைக்குப் பிறகு இந்த 'திராவிட முன்னேற்ற சங்கம்' இன்னும் வீரியத்துடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிரான செயல்பாடுகள், சீர்திருத்தத் திருமணங்கள், பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புதல் என அப்பகுதி மக்களை, திராவிட இயக்கத்தை நோக்கி அணி திரட்டியதில் முக்கியப் பங்காற்றியது திராவிட முன்னேற்றச் சங்கம். சீர்திருத்தத் திருமணத்துக்கு குனியமுத்தூரில் செயல்பட்ட 'சாதிச் சங்கம்' ஒன்று எதிர்க் கருத்துகளைக் கூறி, திருமணம் செய்தவர்களுக்குக் கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. அதனைக் கண்டித்து, திராவிட முன்னேற்றச் சங்கத்தின் சார்பில், 26.12.1936 அன்று அறிக்கை ஒன்று வெளியானது. அந்த அறிக்கையை வெளியிட்டவர் என்.பி.தீவிரம். பெயருக்கு ஏற்ப இருகூர் பகுதியில் திராவிட இயக்கத்தில் தீவிரமாக இயங்கினார் என்.பி.தீவிரம்.

...பயணிப்போம்.

## விமர்சகர்களும் பாராட்டும் விடியல் நாயகர்!

**த**மிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெற்றிக்குக் காரணம் எனத் தனது அனுபவத்திலிருந்து, முகநூலில் பதிவிட்டுள்ளார், மூத்த பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகருமான பாகி என்கிற பா.கிருஷ்ணன். அவரது பதிவிலிருந்து...

'நியூஸ்-18 அலைவரிசை ஏற்பாடு செய்திருந்த CNN - News 18 Town Hall உச்சி மாநாடு (Summit) நிகழ்ச்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அந்த நிகழ்ச்சிக்கு அழைப்பு வந்து, பார்வையாளராகச் சென்றிருந்தேன். நிகழ்ச்சியில், முதலமைச்சரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அப்போது, அண்மையில் நான் எழுதிய இரு புத்தகங்களை அளித்து, சிறிது நேரம் உரையாடினேன்.

"உங்க டிபேட்லாம் பார்க்கறேன். நிதானமா, யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்காமல், நடுநிலையோடு பேசுகிறீர்கள்" என்று கூறினார். இத்தனைக்கும் டி.வி. விவாதங்களில் தி.மு.க. அரசின் மீதான குறைகள் கண்ணில் பட்டால், விமர்சிக்கத் தவறுவதில்லை. அதையும் முதல்வர் அறிகிறார் என்பதையும் தெரிந்துகொண்டேன். பல சந்தர்ப்பங்களில் அவரது பண்பான நடவடிக்கை வியப்பில் ஆழ்த்துகிறது.

ஒரு நாளேட்டில், மாநில சுயாட்சி குறித்து என் கருத்தை வைத்து கட்டுரை எழுதியிருந்தேன். அதைப் படித்துவிட்டு எனக்கு சுமார் 10 அழைப்புகள் வந்தன. அவற்றில் 8 அழைப்புகள் தி.மு.க.வினர் செய்தது. அந்தக் கட்டுரை எழுதிய விதத்தைப் பற்றி பேசினர். இத்தனைக்கும் தி.மு.க.வுக்கு ஆதரவான கட்டுரை அல்ல. தி.மு.க. தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெற்றிக்கு என்ன காரணம் என்பதற்கு அது ஒன்றே சான்றாகும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பிறந்த நாளில் இரட்டிப்பு மகிழ்ச்சியும் வாழ்த்தும்!



கே.மூர்த்தி

2015-ஆம் ஆண்டு மார்ச் 2-ஆம் தேதி, எனது 54-வது பிறந்தநாள் அன்று, அண்ணா அறிவாலயத்தில் தமிழ்த்தாயின் தலைமகன், தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களை, நேரில் சந்தித்து வாழ்த்து பெறச் சென்றிருந்தேன். அப்போது, இன்னொரு இன்பமாக இனமானப் பேராசிரியர் அவர்களும் உடன் இருந்தார். இருவரும் வாழ்த்தியது, எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி அளித்த பிறந்த நாளாக அமைந்தது. அப்போது, வட்டச் செயலாளராகக் கழகப் பணியாற்றினேன். இந்த அரிய புகைப்படத்தை என்றென்றும் என் நினைவில் கொண்டுள்ளேன்.

**- கே.மூர்த்தி, மாவட்டக் கழகப் பிரதிநிதி, அனுப்பர்பாளையம், திருப்பூர் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

99

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



# நம்பிக்கையும் வாக்குறுதியும்...

***அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், அனைத்து குடும்பத்தினருக்கும் கருணைத்தொகையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்கிறாரே எடப்பாடி பழனிசாமி?***

'அறுக்க மாட்டாதவன் இடுப்பில் ஐம்பத்தெட்டு அரிவாள்' என்று ஊர்ப்புறத்தில் சொல்லுவார்கள். ஆட்சிக்கு வரப்போவதில்லை என்று தெரிந்தே, தவணை முறையில் தேர்தல் வாக்குறுதிகளை அடித்து விடுகிறார் எடப்பாடி பழனிசாமி. குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்குவோம் என்று 2021-இல் தி.மு.க. தலைவர் அறிவித்தபோது, தமிழ்நாட்டின் நிதி நிலைமையில் இது சாத்தியப்படாது என்றவர்தான் எடப்பாடி. ஆனால், தி.மு.க. தலைவரின் வாக்குறுதிக்குப் பெண்களிடம் நம்பிக்கையும் ஆதரவும் இருந்ததால், அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்தால், மாதம் 1,500 ரூபாய் வழங்குவோம் என்று பல்டி அடித்தார். தமிழ்நாட்டு மக்கள் தி.மு.க.வையே வெற்றிபெற வைத்தார்கள். தற்போது, ஒரு கோடியே 31 இலட்சம் பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை எனும் பெயரில் மாதம் 1,000 ரூபாய் வழங்குகிறது, திராவிட மாடல் அரசு.

2026 தேர்தல் நெருங்கி வருவதால், 'அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அனைத்து குடும்பத் தலைவிகளுக்கும் 2,000 ரூபாய் வழங்கும் குலவிளக்கு திட்டம் செயல்படுத்தப்படும்' என்றார், எதிர்க்கட்சித் தலைவர். தி.மு.க. அரசின் திட்டங்களின் பெயர்களிலேயே 'உரிமைத்தொகை', 'புதுமைப்பெண்', 'நான் முதல்வன்' என்கிற முற்போக்கும் தற்சார்பும் பொதிந்திருக்கிறது. அ.தி.மு.க. அறிவிப்புகளில் குலவிளக்கு, கருணைத்தொகை எனப் பண்ணையார்த்தனம் வெளிப்படுகிறது. கடந்த பிப்ரவரி 13 அன்று அதிகாலையில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை பெறுவோரின் வங்கிக்கணக்கில் 5,000 ரூபாயை வரவு வைக்கச்செய்தார் நமது முதலமைச்சர். அத்துடன், திராவிட மாடல் 2.0 ஆட்சியில் உரிமைத்தொகையாக மாதம் 2000 ரூபாய் வழங்கப்படும் எனவும் அறிவித்தார். மக்களின் ஆதரவு அமோகமாகப் பெருகியதால் ஆடிப்போன பழனிசாமி, 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சியில் வரிச்சுமையால் தமிழ்நாட்டு மக்கள் அவதிப்படுவதாகவும், அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கருணைத்தொகையாக 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டின் நிதிநிலையில் ஆயிரம் ரூபாய் வழங்குவதே சிரமம் என்று 5 ஆண்டுகளுக்கு முன் சொன்ன எடப்பாடி பழனிசாமி, பத்தாயிரம் ரூபாயை எப்படி வழங்குவார் என்று பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, "துறை சார்ந்த அதிகாரிகள், நிபுணர்கள், வல்லுநர்கள் ஆலோசனைகள் மூலம் வரியை உயர்த்தி, வருவாயைப் பெருக்கி, இந்த அறிவிப்புகளை நிறைவேற்றுவோம்" என்றார். இதற்கு அந்தப் பருத்திமூட்டை குடோனிலேயே இருந்திருக்கலாம். தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகளைக் காப்பி, பேஸ்ட் செய்வது ஜெயலலிதா காலத்திலிருந்தே அ.தி.மு.க.வின் வழக்கம். எடப்பாடி பழனிசாமிக்கு அதைக்கூட சரியாக செய்யத் தெரியவில்லை. ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் வீடு வீடாக எடுத்துச்சொல்லி, திராவிட மாடல் 2.0 வெற்றியை உறுதிசெய்து வரும் தி.மு.க.வுக்கு முன் தாக்குப்பிடிக்க முடியாமல், உளறிக்கொட்டும் நிலைக்கு ஆளாகியிருக்கிறார், அடுத்த முறையும் எதிர்க்கட்சி வரிசையில் உட்காரப்போகிறவர்.

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### பொறுப்போடும் விரிவாகவும்!

1965-ஆம் ஆண்டு ஜனவரி 8-ஆம் தேதி, கழகத்தின் தலைமை செயற்குழு சென்னையில் கூடியது. தமிழ்நாட்டு மக்களின் இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை, மனக்கொதிப்பைக் காட்டுவதன் அறிகுறியாக, அந்த ஆண்டு குடியரசு நாளை துக்க நாளாகக் கடைப்பிடிப்பது குறித்து, பொறுப்புணர்வோடும் விரிவாகவும் விவாதித்தது. 'குடியரசு வாழ்க! இந்தி, ஆட்சி மொழி ஆக்கப்படுவது ஒழிக! என்பதுதான் நமது முழக்கம், நோக்கம், கொள்கை' என விளக்கினார் பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131